குடியரசுத் தலைவர்

# திருமதி திரவுபதி முர்முவுக்கு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜீன் 22 - குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு பிறந்த நாளையொட்டி அவருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில். நல்ல உடல் நலத்துடன் வாழவேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல்நலத்துடனும், மகிழ்ச்சியுடன் திகழவும், அனைவருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அவரது பொதுவாழ்வு அமைந்திடவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவில் ஜீன்டீன்த் கொண்டாட்டத்தில் துப்பாக்கி சூடு!

*வாஷிங்டன், ஜூன் 22 - அமெரிக்காவில் ஜூன் 19ம் தேதியை ஜூன்டீன்த் என்ற பெயருடன் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட நாளாக கொண்டாடி வருகின்றனர். ஜோ பைடன் அரசாங்கம், 2021ம் வருடம் முதல் அமெரிக்காவில் உள்ள தேசிய விடுமுறை நாட்களில் ஒன்றாக இதை கொண்டாட ஒப்புதல் வழங்கியதிலிருந்து, இது நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது. இந்த விடுமுறை நாட்களில் இளைஞர்கள் ஆங்காங்கே கொண்டாட்டங்களில் ஈடுபடுவது வழக்கம்.*

*அவ்வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜூன்டீன் கொண்டாட்டத்தின் நிறைவில் துப்பாக்கி சூடு நடந்திருக்கிறது. இதில், சிறுவர், சிறுமிகள் உள்பட 6 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இந்த துப்பாக்கி சூடு மாலை 04:20 மணியளவில் மில்வாக்கி நகரில் கிரேட்டர் பிலடெல்பியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நடந்ததாக நேரில் பார்த்தவர்களும், நேரில் படம் பிடித்த ஒருவரும் உறுதிப்படுத்தினர்.*

கடலூர் கிழக்கு மாவட்ட

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை !

*கடலூர், ஜூன் 22 - கடலூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*



*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பார்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து, அதனை உரிய ஆவணங்களுடன் வருகின்ற 30.06.2023 வெள்ளிக்கிழமை அன்று மாலைக்குள் மாவட்டக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்.*

***குறிப்பு:** ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணபத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்துவிவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

## கிரீஸ் படகு விபத்து 81 பேர் பலி!

*கலாமட்டா: ஜூன் 22- கிரேக்க கடற்கரையில் அகதிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பெலோ பொன்னீஸில் படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. தகவலறிந்து கடற்படைக் கப்பல்களுடன் ராணுவ விமானம் மற்றும் ஹெலிகாப்டர், 6 படகுகளும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்த விபத்தில் சிக்கி 59 அகதிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் 104 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என முதல் கட்ட தகவல் வெளியானது. சர்வ தேச கடல் பகுதியில் நிகழ்ந்த இந்த விபத்து பலத்த காற்றினால் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது. இந்நிலையில், தெற்கு கிரீசில் மேலும் 2 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதையடுத்து கடலில் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்துள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்கள் என தெரிய வந்துள்ளது. மீட்பு பணி தொடர்ந்து நடைபெறுகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.*

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பாக

# கழக ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழக செயலாளர் தே.மதியழகன் அறிவிப்பு



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமானஉதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் "திராவிட மாடல் ஆட்சியில் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம்" நடைபெற உள்ளது. அது சமயம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் தெருமுனை பிரச்சார கூட்டத்தினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி

| நாள் / நேரம் | ஒன்றியம் / ஏற்பாட்டாளர்கள் | பேச்சாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 22.06.2023 மாலை 5 மணி | ஊத்தங்கரை பேரூர் R.பாபு சிவக்குமார் பேரூர் செயலாளர் | செந்தாமரை கண்ணன் தலைமை கழக பேச்சாளர் | ஊத்தங்கரை பேரூர் முனியப்பன் கோவில் |
| 22.06.2023 மாலை 6 மணி | ஊத்தங்கரை தெற்கு S.ரஜினி செல்வம் ஒன்றிய செயலாளர் | செந்தாமரை கண்ணன் தலைமை கழக பேச்சாளர் | மாரம்பட்டி |
| 22.06.2023 மாலை 7 மணி | ஊத்தங்கரை மத்தியம் எக்கூர்.T.செல்வம் ஒன்றிய செயலாளர் | செந்தாமரை கண்ணன் தலைமை கழக பேச்சாளர் | மிட்டப்பள்ளி |
| 23.06.2023 மாலை 5 மணி | ஊத்தங்கரை வடக்கு S.குமரேசன் ஒன்றிய செயலாளர் | தர்மபுரி அதியமான் தலைமை கழக பேச்சாளர் | பெரியதல்லபாடி |
| 23.06.2023 மாலை 6 மணி | மத்தூர் வடக்கு குண.வசந்தரசு ஒன்றிய செயலாளர் | தர்மபுரி அதியமான் தலைமை கழக பேச்சாளர் | எட்டிப்பட்டி |
| 23.06.2023 மாலை 7 மணி | மத்தூர் தெற்கு K.R.K.நரசிம்மன் ஒன்றிய செயலாளர் | தர்மபுரி அதியமான் தலைமை கழக பேச்சாளர் | பாலேதோட்டம் |

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி

| நாள் / நேரம் | ஒன்றியம் / ஏற்பாட்டாளர்கள் | பேச்சாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 22.06.2023 மாலை 5 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு B.கோவிந்தன் ஒன்றிய செயலாளர் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | பெரியமுத்தூர் |
| 22.06.2023 மாலை 6 மணி | கிருஷ்ணகிரி மேற்கு T.தனசேகரன் ஒன்றிய செயலாளர் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | பாலகுறி |
| 22.06.2023 மாலை 7 மணி | கிருஷ்ணகிரி நகரம் S.K.நவாப் நகர செயலாளர் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | பழையபேட்டை ஆட்டோ ஸ்டேண்ட் |
| 23.06.2023 மாலை 5 மணி | காவேரிப்பட்டிணம் பேரூர் J.K.S.பாபு பேரூர் செயலாளர் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | விநாயகர் கோவில் தெரு |
| 23.06.2023 மாலை 6 மணி | காவேரிப்பட்டிணம் மேற்கு தேங்காய். C.சுப்பிரமணி ஒன்றிய செயலாளர் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | சவுட்ஹள்ளிபுதூர் |

பர்கூர் சட்டமன்ற தொகுதி

| நாள் / நேரம் | ஒன்றியம் / ஏற்பாட்டாளர்கள் | பேச்சாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 22.06.2023 மாலை 5 மணி | பர்கூர் பேரூர் P.C.வெங்கட்டப்பன் பேரூர் செயலாளர் | சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் | ஜெகினிக்கொல்லை |
| 22.06.2023 மாலை 6 மணி | பர்கூர் வடக்கு V.G.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் | மல்லப்பாடி |
| 22.06.2023 மாலை 7 மணி | பர்கூர் தெற்கு M.அறிஞர் ஒன்றிய செயலாளர் | சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் | சிகரலப்பள்ளி |
| 23.06.2023 மாலை 5 மணி | காவேரிப்பட்டிணம் கிழக்கு க.மகேந்திரன் ஒன்றிய செயலாளர் | கந்திலி கரிகாலன் தலைமை கழக பேச்சாளர் | பாலேகுலி |
| 23.06.2023 மாலை 6 மணி | நாகரசம்பட்டி பேரூர் VC.தம்பிதுரை பேரூர் செயலாளர் | கந்திலி கரிகாலன் தலைமை கழக பேச்சாளர் | வேலம்பட்டி |
| 23.06.2023 மாலை 7 மணி | போச்சம்பள்ளி V.சாந்தமூர்த்தி ஒன்றிய செயலாளர் | கந்திலி கரிகாலன் தலைமை கழக பேச்சாளர் | சந்தூர் |

**தே.மதியழகன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
கிருஷ்ணகிரி மாவட்ட கிழக்கு தி.மு.க.

சமூக நீதியை நிலைநாட்டுவதில்

# கலிபோர்னியாவுக்கு வழிகாட்டுகிறது திராவிட மாடல் அரசு!

## லண்டன் பல்கலைக்கழக வழக்கறிஞர் சிவசூரியன் 'தி வயர்' இணையதளத்தில் கட்டுரை !

லண்டன் குயின்மேரி பல்கலைக்கழகத்தின் வழக்கறிஞர் சிவசூரியன் முருகன் என்பவர், ஆங்கிலம், இந்தி, உருது மற்றும் மராத்தி ஆகிய மொழிகளில் வெளியாகும் 'தி வயர்' இணையதள பத்திரிக்கையில் திராவிட மாடல் என்பது கொள்கை ரீதியாக கலிபோர்னியாவுக்கே வழி காட்டும் வகையில் சமூக நீதிக்கான வலுவான சித்தாந்தமாக அமைந்துள்ளது என்று தனது கட்டுரையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

அது பற்றிய விபரம் வருமாறு :

சாதி பாகுபாட்டை சட்டவிரோதமாகக் கருத வகை செய்யும் மசோதா, கலிபோர்னியா மாகாண சட்டமன்றத்தின் கீழ் அவையில் இந்த வாரம் விவாதத்திற்கு வர உள்ளது. கலிபோர்னியாவில் இயங்கும் தலித் உரிமைகளுக்காகப் போராடி வரும் அமைப்புகளின் தலைமையில், அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட தலித் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆர்வலர்கள் சேர்ந்து இந்தச் சட்டத்திற்கானமுயற்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த பின்னணியில் கழக தலைமை நிலையச் செயலாளரும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவருமான பூச்சி முருகனின் புதல்வருமான லண்டன் குயின்மேரி பல்கலைக்கழகத்தின் வழக்கறிஞர் சிவசூரியன் முருகன், முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த வலுவான அடிப்படையில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட வெற்றிகரமான சித்தாந்தமான திராவிட மாடல் என்பது, தமிழ்நாடு மற்றும் இந்திய அளவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கையாக இருப்பதாக தனது இணையதளகட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சாதி அமைப்பு என்பது பல நூற்றாண்டுகள் பழமையான சமூக படிநிலையாகும். அது லட்சக்கணக்கான மக்களை துன்பத்திற்கும், பாகுபாட்டிற்கும் ஆளாக்கியுள்ளது. சாதிப் பாகுபாடு இந்திய சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் தங்கள் சமூக அந்தஸ்தையும், வாய்ப்புகளையும் அதன் மூலம் தீர்மானிக்கப்பட்டு நடத்தப்படுகின்றனர். அதன் விளைவாக தாழ்ந்த சாதியினருக்கு எதிராக பிரிவினை, புறக்கணிப்பு மற்றும் வன்முறை உள்ளிட்ட பல்வேறு பாரபட்சமான நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### கலிபோர்னியாவிலும் சாதிய பாகுபாடு

1955ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிகாரப்பூர்வமாக சாதி அமைப்புகள் ஒழிக்கப்பட்டாலும், அதன் தாக்கம் இந்திய அளவில் மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை. உலகமயமாக்கல் மற்றும் எல்லை தாண்டிய புலம்பெயர்வு ஆகியவற்றின் விளைவாக, சாதிய கட்டமைப்பு என்பது கலிபோர்னியா உட்பட உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இது உடனடியான கவனத்தையும், தக்க நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டிய ஒரு மோசமான எதார்த்த நிலையாகும்.

கலிபோர்னியா மற்ற அமெரிக்க மாநிலங்களை விட மிகவும் மாறுபட்டது. அதன்பன்முகத்தன்மை மதிப்பீடு என்பது 100க்கு 96 ஆகும். ஆயினும்கூட, மாநிலத்தின் இந்திய சிறுபான்மையினர் அதன் மக்கள்தொகையில் மிகக் குறைந்த பகுதியைக்கொண்டிருந்தாலும், சமூக அளவில் சாதிய கட்டமைப்புகள் நடைமுறையில் இருப்பது ஆச்சரியமாக உள்ளது.

இப்போது, கலிபோர்னியா சட்டமன்ற உறுப்பினர்கள் மாநிலத்தின் சாதியப் பாகுபாடு எதிர்ப்பு சட்டங்களின் கீழ் சாதிய பாகுபாடுகளுக்கு எதிரான சட்ட மசோதாவை கொண்டு வந்து, சாதி பாகுபாட்டை அகற்றும் நோக்கில் தீர்மானமாக நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

இந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டால், அமெரிக்காவில் சாதியப் பாகுபாட்டை தடை செய்த முதல் மாநிலமாக கலிபோர்னியா இருக்கும். இந்த மசோதா சாதியப் பாகுபாட்டை வெளிப்படையாக தடை செய்வதோடு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பாகுபாட்டு எதிர்ப்பு சட்டங்களின் கீழ் இந்த சட்டம் பாதுகாக்கப்பட்ட பிரிவாக இருக்கும். இந்த நடவடிக்கை உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் தாயகமாக உள்ள கலிபோர்னியாவில் பெரும்பான்மையாக வசிக்கும் தெற்காசிய மக்களுக்கு பயனளிக்கும்.



**வழக்கறிஞர்**
**சிவசூரியன்**
**லண்டன் குயின்மேரி பல்கலைக்கழகம்**

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் கொண்ட நாடு என்ற நற்பெயர் இருந்தபோதிலும், கலிபோர்னியாவில் சாதி அமைப்பு வேரூன்றியுள்ளது. அமெரிக்காவில் கூட, புலம்பெயர்ந்த இந்தியர்கள் தொடர்ந்து சாதியப் பாகுபாட்டை பின்பற்றுகிறார்கள். அதன் விளைவாக தனிநபர்களுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதுடன், அவர்களின் சாதி அடையாளத்தின் அடிப்படையில் பாரபட்சத்திற்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

### சமூக நீதியை வளர்த்தெடுப்பதில் 'திராவிட மாடல்' வெற்றி

சாதியப் பாகுபாடு ஆழமாக வேரூன்றியுள்ள நிலையில் அதன் நடைமுறைகளை களைய வெறுமனே சட்டத்தை மட்டும் நிறைவேற்றுவது போதாது. சமூக நீதியை உண்மையிலேயே வளர்த்தெடுக்க, கலிபோர்னியா அரசாங்கம் உலகின் பிற பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட வெற்றிகரமான நிர்வாக மாடல்களைப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் சமூகநீதி வெற்றிகரமாக நிலைநாட்டப்பட்டதற்கு மக்களால் அங்கீகரிக்கப்பட்ட திராவிட மாடல் ஆட்சி முறை சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளது. சமத்துவம், சமநீதி, ஒன்றுபட்ட கொள்கை முடிவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள திராவிட மாடல் ஆட்சி, கொள்கை முடிவுகளில் அனைத்து சமூக மக்களின் பங்களிப்புக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், விளிம்புநிலை சமூகங்களை உயர்த்துவதையும் தனது நோக்கமாக கொண்டுள்ளது.

திராவிட இயக்கத்தின் ஆரம்ப காலங்களில் பார்ப்பனரல்லாத தலைவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கவும், அரசாங்கத்திலும், பொது வாழ்க்கையிலும் அதிக பிரதிநிதித்துவம் கோரவும் ஒரு மேடையை அமைத்துக் கொடுத்ததில் நீதிக்கட்சி முக்கிய பங்கு வகித்தது. நீதிக்கட்சி தனது ஆட்சிக் காலத்தில் சமூகநீதியையும், சமத்துவத்தையும் மேம்படுத்தும் நோக்கில் பல கொள்கைகளை சட்டமாக்கியது. 1921ஆம் ஆண்டில் வகுப்புவாரி பிரதி நிதித்துவ அரசு ஆணை (சி.ஜி.2) கொண்டுவரப்பட்டது முக்கிய முன்முயற்சிகளில் ஒன்றாகும். இந்த உத்தரவு அரசு வேலைகளில், குறிப்பாக கல்வி மற்றும் நிர்வா கத்தில் பிராமணரல்லாத சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது.

அரசுப் பணிகளில் பல்வேறு சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதில் நீண்டகாலமாக நிலவி வந்த ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்வதற்காக கொண்டுவரப்பட்ட நிலையில், பிற உயர்சாதி குழுக்களுக்கு சாதகமாக அது வளைக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச்சட்டத்தில் சமத்துவச் சட்ட மசோதாக்கள் சேர்க்கப்படுவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் சமூகநீதி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதில் சி.ஜி.ஓ ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருந்தது.

மாநிலத்தின் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பரிந்துரைக்க ஏ.என். சட்டநாதன் தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முதன்முதலாக தமிழ்நாடு பிற்படுத்த ப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் 1970 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில், பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குள், இடஒதுக்கீட்டுக் கொள்கையின் பெரும்பகுதி நன்மைகளை உயர் சாதியினர் பெற்றதையும், உண்மையான பிற்படுத்தப்பட்ட சாதிகளின் வளர்ச்சியை அவர்கள்திறம்படத் தடுத்ததையும் எடுத்துக் காட்டியது.

முத்தமிழறிஞர் கலைஞரின் வரலாற்று சாதனை 1974ம் ஆண்டு வேலை வாய்ப்புக்கான இடஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கையை சட்டசபையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்தார். பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒதுக்கப்பட்ட இடங்களின் அளவு உள்ளிட்ட மாநிலத்தின் வேலைவாய்ப்பு இடஒதுக்கீடு குறித்த விவரங்களை விளக்கும் விரிவான ஆவணமாக அந்த வெள்ளை அறிக்கை இருந்தது.

அந்த வகையில், சமூகத்தின் இயக்கத்தை ஊக்குவிப்பதிலும், வரலாற்று அநீதிகளைத் திருத்துவதிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான முக்கியத்துவத்தை முத்தமிழறிஞர் கலைஞர் உணர்ந்திருந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக அயராது பாடுபட்ட அவர், இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் தனியார் துறைக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் விரும்பினார்.

திராவிட இயக்க பாரம்பரியம் என்ற முறையில், சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்கான மு.க. ஸ்டாலின் அவர்களின் அர்ப்பணிப்பானது தேசிய மற்றும் சர்வதேச அளவில்அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் உள்ள விளிம்புநிலை மற்றும் ஒடுக்கப்பட்டதலித் மக்களுக்கான வெளிப்படையான ஆதரவாளராகவும், சாதிய அடிப்படையிலானபாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிராகவும் மு.க. ஸ்டாலின் அவர்கள் குரல்கொடுத்துள்ளார்.

### முதல்வர் மு.க. ஸ்டாலினின் அர்ப்பணிப்பு மனப்பான்மை

திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்காக மு.க. ஸ்டாலின் அவர்களின் அர்ப்பணிப்பும், சமூக நீதி மற்றும் சமத்துவத்தை வளர்ப்பதற்கான அவரது முயற்சிகளும் இந்திய அளவிலும், உலக அளவிலும் சாதிய அடிப்படையிலான ஒடுக்குமுறை மற்றும் பாகுபாடுகளை எதிர்த்துப் போராடும் ஆர்வலர்கள் மற்றும் இயக்கங்களுக்கு உத்வேகத்தை அளித்துள்ளன. திராவிட இயக்கத்தின் குறிக்கோள்களைப் பகிர்ந்து கொண்ட பலதரப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர்களையும், தலைவர்களையும் ஓரணியில் ஒருங்கிணைத்த அவரது திறமை திராவிட இயக்கத்திற்கு அவர் ஆற்றிய மிக முக்கிய பங்களிப்புகளில் ஒன்றாகும்.

உள்ளூர் மக்களுக்கும், தமிழ் பேசாத புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையில் பகைமையை உருவாக்கும் நோக்கத்துடன் தவறான செய்திகள் பரப்பப்பட்ட சமீபத்திய விவகா ரத்திலும், திராவிட மாடல் என்பது புலம்பெயர்ந்தவர்களின் நலனுக்கு துணை நிற்கிறது. இந்த விஷயத்தில் நாட்டின் நல்லிணக்கத்தைப் பேணுவதில் மிகுந்த அக்கறையுடன் இந்த விவகாரத்தை தமிழ்நாடு அரசு கையாண்டு, தமிழ் மாநிலத்தின் மீது நம்பிக்கை கொண்டு இங்கு வந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பக்கம் நின்றது. முதல்வர் மு.க. ஸ்டாலின் அரசு ஒரு படி மேலே போய் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் பயனளிக்கும் விதமாக "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

அதுபோன்றே கலிபோர்னியாவின் சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த மாகாணத்தில் வாழும் புலம் பெயர்ந்தவர்களின் பாகுபாடு குறித்து கவலை கொண்டுள்ளனர் என்பது ஊக்கமளிக்கிறது.

சட்டத்தின் முன் நாம் அனைவரும் சமம் என்பதை மீண்டும் வலியுறுத்தும் அரசின் அனைத்துத் திட்டங்களிலும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்என்பதையும்தமிழ்நாடுஅரசுமுன்னெடுத்துச் செல்கிறது. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிராகவும், அதனால் உயர்சாதியினர் பெறும் கூடுதல் நன்மைகளை குறிப்பிட்டும் திராவிட மாடல் அரசு தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

மேற்கண்ட வகையில் கலிபோர்னியா அரசாங்கம், திராவிட மாடல் ஆட்சியை முன்னெடுப்பதன் மூலம் சமூக நீதியை எவ்வாறு திறம்பட நடைமுறைப்படுத்துவது, சமத்துவமின்மை மற்றும் சமூக பாகுபாடு ஆகிய பிரச்சினைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்தும் நுட்பமான கொள்கைகளை வரையறை செய்து பின்பற்றலாம்.